உ




Sri

Dr K.S. Krishnan . F.R.S

Director.

National physical Laboratory

NEW. DELHI

From.

S. Krishnaiyengar.
Retired Head Master.
North car Street
Srivilliputtur

க்ஷேமம்;　　ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வடக்கு ரதவீதி
ஸ்ரீவில்லிபுத்தூர்.
~~x~~

ஸ்ரீ சி. கிருஷ்ணனுக்கு அனேக மங்களாசாஸனம்.

உபயக்ஷேமம். அறுபதாவது ஆண்டு நிறைவு விழா கமிட்டியாரிடமிருந்து அழைப்பிதழ் [14-12-58ல் நடந்த விழா] 15-12-58 மாலையில் எனக்குக் கிடைத்தது. இந்த விழா பலவிடங்களிலும் நடைபெறுகின்றது. அவ்வப்பொழுது பத்திரிகைகளில் பார்த்து மகிழ்ந்தேன். 11.12.58 ம் தி இந்து (Hindu) வில் நேருஜியுடன் நீயும் சேர்ந்து இருக்கும் காட்சியைக் கண்டதோன் இருவருடைய முகபாவங்களையும் கண்டு ஆனந்தஸாகரத்தில் அமிழ்ந்து போகின்றேன். கண் பார் கண்ணெச்சில் படாமைக்காக அனவரத நித்யகைங்கர்யதுரந்தரனை ஆழ்வார் நிரதிசய ஹ்ருத்மகனாக உபயவிபூதி நாதனுக்குப் பல்லாண்டு பாடியதே போன்று என் கிருஷ்ணன் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்து சதாபிஷித்தனாக ஸஹஸ்ராபிஷித்தனாக வாழ வேண்டும் என்று என்னையறியாது என் நா வாழ்த்தியது.

பெரியகோட்டியாருடனே அழகிய மணவாளனும், வடபெருங்கோயிலுடையானும், ஆழ்வார் ஆசார்யர்களும் எழுந்தருளியுள்ள இந்த அநந்யார்ஹமான திவ்யதேசத்திலே கோஷ்டியிலே ஸ்ரீமான் அவர் க்ஷேம: என்று ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

இங்ஙனம்.

இதி நிவேதயே ॥

ராமாநுஜதாஸன்

ஸ்ரீ. கிருஷ்ணன்

S. Krishna Ayyangar B.A.;L.T,
Retaind Headmaster
North Car Street
SVPR.

श्रीमत्यै गोदायै नमः॥   श्रीः   श्रीमते रामानुजाय नमः॥

# Dr. K.S. கிருஷ்ணன் அறுபது நிறைவு விழா நல் வாழ்த்திதழ்

[1] திருப்பாவை தந்த திருப்பாவை செம்பொன்
திருப்பாதம் நங்கே திரு.

## ஆசிரிய விருத்தம்

[2] திருவுறையும் மிகுவளமார் தென்னாட்டுத் திலகமென விளங்கித் தோன்றும்
ஊருவில் நலம் புகழ்கின்ற ஸ்ரீவில்லிபுத்தூராம் புனிதர் போற்ற
மருவியொளிர் பதியினிலே மாணாக்கர் பயில் இந்துப் பள்ளியென்ற
பெருங்கல்விச் சாலையினில் பெருமிதமும் அருந்திறனும் பெரியோர்-
-சொல்லும்

[3] பொறையாண்மை மிகுகல்வி நிகரில்லா ஒழுக்கமுறு வாய்மை மிக்க
நிறையான ஒளிவீசும் மாணிக்கமென நேர்நின்ற நேர்மையாளா!
மறை வாய்மை அந்தணர்கள் மறைக் கொழுந்தே! குலத்தலைவனானவனே!
பிறையென்ன பெருமதியோய் பெருமைமிகு வயணவ மாயாலங்கிருந்தாயோய்!

[4] ஆழ்வார்கள் செழுந்தமிழும் ஆரணங்காம் கோதை புனைஆரத்தோடு
வாழ்வான கல்விவளம் எனும் அமுதை மாநிலத்தோர்க்களிக்கும் அண்ணல்!
போழ்வான கதிரொளி செய் பரிதியெனப் போற்றிச்செய அவதரித்த
வாழ்வான அண்ணங்கர் ஆரியனார் மகிழ்ந்திடவே சிறக்க வந்தோய்!

## வேறு

[5] மாரி பெயல் பொய்த்திடினும் மாட்சிமிகு பல்வளங்கள்
வாரி யளித்திடும் நல்வற்றுயருப் பென்றும்
சீரியன்ற மேன்மைத் திருப்பதியில் தோன்றியொளிர்
பேரியன்ற கீர்த்திப் பெருமாளும் நீயன்றே.

## வேறு

[6] ஞானமுடன் மெய்ஞ்ஞான விஞ்ஞான நன்மைகளை ஆய்ந்தறிந்து
தானவற்றை மேநாட்டார் வியப்படைய அறிவுறுத்தி நிலைக்கச்செய்து
ஆன அணு ஆராய்ச்சி நடாத்துகின்ற அறிவ! ஒளிர் பாரதத்தின்
மானவரும் மதிபடைத்த மாணிக்கமே! எஞ்ஞான்றும் வாழி! வாழி!

[7] செருநரை வெல் அர்ச்சுனர்க்குக் கீதை சொலித் தெளித்த கண்ணன்போல்
உறுகின்ற விஞ்ஞானக் கதிர் பரப்பி மேநாட்டார் உய்யும் வண்ணம்
நிறுவிய பல்புகழ் படைத்த நாவலனே! நிலவுலகில் கிருஷ்ணனே! உன்
அறுபது எனும் ஆண்டு விழா மேலோங்கி அறுநூறாய்த் தழைத்து வாழி!

## ஆசிரியப்பா.

[8] ஞான மெய்ஞ்ஞானம் நல்லவிஞ்ஞானம்
தானம் தவம் குணம் தகைமைநல் லடக்கம்
பெற்றுத் திகழும் பெருங்குணமுடன்
ஆழ்வா ரளித்த அமுத வாரிதியை
வாழ்ந்திட மக்கட்கு வாரி வழங்கிய
வள்ளால்! மாபெரும் வைணவ சிகாமணி
கண்டேன் நின்னுரு களிப்பு அளவறவே
கொண்டேன் கோதில் மாணவ மணியே!
மாந்தருள் மணியாம் மாபெரும் நேருவும்
சாந்தம் பொருந்திய நீயும் சேர்ந்தது
மணியுடன் ஒளிசேர்ந் திலங்கிய மாட்சியென்
கண்ணினுள் நின்று காதலைப் பெருக்க
வாழ்த்தினேன் உன்னை வாழ்க பல்லாண்டென
பெருமால் கெடுக்கும் பெருமானாகிய
திருமாற் பாடிய ஷோட்டுசித் தன்னை
உன்பெரு மைக்கு ஊறு காணாமல்
என்றும் வாழ்க நீ! கண்ணா! எற்புறு
பார்த்தனுக் கன்று கீதை பகர்ந்த
தீர்த்தன் பெயரோய்! தீர்க நின் முதுமை
பெறுக! பெறுக! பெறற்கரும் இளமை
தெறுக! தெறுக! நின்பகை தின்மை
உறுக! உறுக! ஒளிகட லுலகில்
உன்சிறப் பென்சிறப் புன் மகிழ்வென் னதே.
என்றே யருந்திடும் யானும் இறைஞ்சினன்
சூடிக் கொடுத்த சுடர்க்கொடி மால்பதம்
பாடியருளிய பொற்கொடிப் பாதம்
நிலவுலகு தனில் என்றும் நீ
வாழி! வாழி! ஊழி! நனிசிறந்தே.

[ஆக்கியோன். வித்துவான். பார்த்தசாரதி
தமிழாசிரியர்
இந்து உயர்நிலைப்பள்ளி
ஸ்ரீவில்லிபுத்தூர்]

இங்ஙனம்
பேரன்பு மறவாத
எஸ். கிருஷ்ணன்